# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 34/2020

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பிரமணிய நாயுடு | ஜாதி | : –– |
| வயது | : 59 | கிராமம் | : அரும்பாக்கம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**13.07.2026**

**வா.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு 5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும் என்றால் ஆமாம். தாவா சொத்தின் புல எண், வகைப்பாடு சொல்ல முடியுமா என்றால் 122/6, 122/7, 122/9 ஆகும். அது அனாதீனம் நிலமாகும். 122/9 என் அனுபவத்தில் இல்லை. பஞ்சாயத்து கட்டிடம் கட்ட எடுத்து கொண்டார்கள். நான் இந்த வழக்கு என்ன புல எண்ணிற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 122/6க்கு தாக்கல் செய்துள்ளேன். 122/2 முதல் 122/14 வரை உள்ள புல எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் அத்தனை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை. 122/2 முதல் 122/14 வரை உள்ள புல எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மகன், மகள் பெயர் என்ன என்றால் மகன் ஜெகதீஷ், மகள் கவிதா ஆவார். என் மகன், மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான்.

4. என் மருமகள் பெயர் என்ன என்றால் மேனகா ஆகும். எனது மருமகன் பெயர் என்ன என்றால் நரேஷ் ஆகும். என் மகள், மருமகன் சொத்தில் தகராறு செய்யவில்லை என்றால் மருமகன் நரேஷ் தகராறு செய்தார். இந்த

வழக்கின் 1ம் பிரதிவாதி எனது மருமகன் நரேஷ் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நான் லாரி ஷெட், வீடு கட்ட முயற்சித்ததற்கு என் மீது ஊர்மக்கள் சேர்ந்து வட்டாட்சியரிடம் புகார் கொடுத்தார்கள் என்றால் ஊர்மக்கள் அனைவரும் கொடுக்கவில்லை. சாமிதாஸ் மட்டும் கொடுத்தார். அங்கன்வாடி கட்டவும், சமுதாய கூடம் கட்டவும் வழக்கு சொத்து ஊர் பயன்பாட்டிற்காக தேவைப்படுவதாக கூறி சாமிதாஸ் என்பவர் புகார் கொடுத்தார் என்றால் அவர் புகார் கொடுத்தார். ஆனால் என்ன விவரம் சொல்லிக்கொடுத்தார் என்பது தெரியாது.

5. சாமிதாஸின் புகாரில் வட்டாட்சியர், கோட்டாட்சியர் வழக்கு சொத்தை பார்வையிட்டு ஆக்கிரமிப்புகளை அகற்ற பிரிவு 6, பிரிவு 7ன் கீழ் அறிவிப்பு கொடுத்தார் என்றால் ஆமாம். பிரிவு 6, பிரிவு 7ன் கீழ் அறிவிப்பு வந்த பின்பும் நான் காலி செய்யவில்லை என்பதால் சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம். அதில் நான் 7ம் எதிர்மனுதாரர் என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் ரிட் மனுவில்தான் நான் தரப்பினராக உள்ளேன் என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் WP No.21707/2024ன் உத்தரவு நகல் பி.வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அந்த ரிட் மனு உத்தரவை செயல்படுத்தாததால் நீதிமன்ற அவமதிப்பு மனு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது.

6. என்னை காலி செய்ய வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் மாவட்ட ஆட்சியர் பிறப்பித்தார். என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த உத்தரவு என்றால் ஆமாம். **(சாட்சி ஒப்புக்கொண்டதால் மாவட்ட ஆட்சியரின் 22.05.2026ம் தேதியிட்ட உத்தரவு நகல் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பி.வா.சா.ஆ 2 உத்தரவில் என்னை நிலமற்ற ஏழையாக கருதமுடியாது என்று சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். ஆனால் என்னிடம் நிலமே இல்லை. வருவாய் துறையின் நடவடிக்கையை தடுத்து நிறுத்ததான் என் மருமகன் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் எனக்கு எதிராக தீர்மானம் செய்தார்கள். நான் சொல்லும்

பஞ்சாயத்து தீர்மானத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

7. என் அப்பா பெயரில் இன்றுவரை 5 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் ஆமாம். என் அப்பா பெயரில் 3 1/2 ஏக்கர் கூட கிடையாது. நான் 2005லேயே என் தம்பிகளுக்கு விற்றுவிட்டேன். என் அப்பா எப்போது இறந்தார் என்றால் 10, 12 வருடங்கள் இருக்கும். 2005ல் என் அப்பா இறந்துவிட்டாரா என்றால் 2010க்கு மேல்தான் இறந்தார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 முதல் 6 வீட்டு வரி ரசீதுகள் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாதவை என்றாலும் அதை நான் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 7 முதல் 17 மின் கட்டண ரசீதுகள் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாதவை என்றாலும் அதை நான் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ 18ல் உள்ள ஜெயந்தி யார் என்றால் மனைவி ஆவார்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)